GCG1-2-TA

# சீஷர்களை உருவாக்கிடுங்கள்: கிறிஸ்தவர்களுக்கான இயேசுவின் அழைப்பு- நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்**: எது மிகவும் முக்கியமானது என்று நினைக்கிறீர்கள்?

அமெரிக்காவிலும், கானடா, மத்திய அமெரிகா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, மத்திய கிழக்கு பகுதி, ஆப்ரிகா, ஆசியா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியாவிலும் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவரும் செய்யவேண்டிய பிரதானமான காரியமாக இயேசு எதிர்ப்பார்க்கிறது என்ன?

அதற்கு இயேசு, "புறப்பட்டு போய் சீஷர்களாக்குங்கள் என்றார்." சீஷன் என்றால் என்ன? எப்படி சீஷர்களை உருவாக்க முடியும்?

இதை பற்றி சொல்ல விருப்பவர் எனது இன்றைய விருந்தினரான ராபி கேலட்டி, இவர் 3200 அங்கத்தினர்களை கொண்ட சபைக்கு மேய்ப்பராக இருக்கிறார் நான்கு காலை ஆராதனைகள் அங்கு நாடாகும், அதோடு தனிப்பட்ட விதத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏழு முதல் எட்டு நபர்களை சீஷர்களாக ஏற்ப்படுத்துகிறார். அவர்களும் மற்றவர்கள் சீஷர்களாக்க புறப்பட்டு செல்கின்றனர்.

இதுவரைக்கும் நீங்கள் யாரையும் சீஷர்களாக ஏற்ப்படுத்தாதிருந்தால், இதை உங்களால் நிச்சயம் செய்ய முடியுமா? நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படை செயல்முறை காரியங்கள் என்ன?

அதைதான் இன்றைக்கு தி ஜான் அன்கேர்பெர்க் சிறப்பு நிகழ்ச்சியில் அறிந்துகொள்ள இருக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு உங்களுக்கு சிறப்பான காரியத்தை வைத்திருக்கிறோம். பிற தேசங்களில் இருந்து நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருப்பவர்களை வரவேற்கிறேன், ஐரோப்பா, மத்திய கிழக்கு மற்றும் ஆப்ரிக்க மக்கள். சமீபத்தில் நேயர்களில் சிலர் சொல்வதை கேட்டேன் டெஹ்ரான், ஈரான், ஹாங்காங் மக்கள், சிங்கபூர் மக்கள்,இந்தியாவில் உள்ளவர்கள். இன்னும் பலதரப்பட்ட நேயர்களிடம் இருந்து தகவல்களை பெறுகிறோம் இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்து அப்பறம் பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து. அதற்கு அப்பறம் ஆப்ரிகாவினர் தென் அமெரிக்காவின் பகுதியில் இருப்பவர்கள். உங்களுக்கு இன்றை சொல்லுகிறேன், நேயர்களே, உங்களோடு தொடர்புகொள்ளும்படியாக தேவன் இந்த மேடையை கொடுத்திருப்பதை நினைத்து பூரிப்படைகிறேன். இன்றைக்கு நாம் தெரிந்துகொண்ட தலைப்பு இன்றைய நிகழ்ச்சியை பார்த்துகொண்டிருக்கும் 200 நாடுகளில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு ஏற்ப்புடையதாக இருக்கும். இது சபைக்கு இயேசு கொடுத்திருக்கும் கட்டளையில் பிரதானமானது. தனித்தனியாக ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் உரியது. அதைதான் பிரதான கட்டளை என்று சொல்லுகிறோம். இன்றைக்கும், அதை விளக்கும்படியாக, நம்முடைய தேசத்தில் உள்ள பிரசித்திபெற்ற வேதாகம போதகர்களில் ஒருவர் வந்திருக்கிறார், ராபி கேலட்டி. அவர் இதை நமக்கு விளக்கி சொல்லி, தேவனுடைய வார்த்தையிலிருந்து நமக்கு போதித்திடுவார். நிச்சயம் உங்களை உற்சாகபடுத்துவதாக இருந்திடும். உங்களை எழும்பச் செய்வதாக இருக்கும். உங்களுக்கு தெரியாத சில வாக்குத்தத்தங்கள் இந்த பிரதான கட்டளையோடு சொல்லப்பட்டிருக்கிறது. நீங்களே வியப்படையும் பல விஷயங்கள் இதில் உள்ளடக்கியுள்ளது அதனால் அந்த தகவல்களை நம்மோடு பகிர்ந்துகொள்ளும் படியாக இவரை அழைத்திருக்கிறேன். சரி, ராபி, இந்த பிரதான கட்டளையானது, இயேசு கிறிஸ்து கூறிய மிகவும் வியப்பான விஷயத்தோடு துவங்குவதாக இருக்கிறது. அது என்ன?

**ராபி கேலட்டி:** ஆமா, மத்தேயு 28:16-20 தான் பிரதான கட்டளை. இயேசு இந்த வார்த்தைகளை கூறியிருக்கிறார், “வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.” அதற்கு பிறகு சொல்கிறார், “ஆகையால், போய், சீஷர்களை உருவாக்குங்கள்.

இப்ப, ஒரு கேள்வி வருது, ஜான், எப்படி இத்தனை வருஷமா இதை விட்டுவிட்டோம்? எப்படி இதை மறந்துவிட்டோம்? நா சில ஆராய்சிகள் செய்து அதிகால கிங் ஜேம்ஸ் பதிப்பு வேதத்தை பார்த்தேன். பல நூற்றாண்டுகளாக மொழிப்பெயர்ப்புகளின் நிலை மாற்றத்தால், இந்த கட்டளையின் மையப்பொருளை நாம் இழந்துவிட்டோம். இந்த பிரதான கட்டளையில், இந்த வார்த்தை, ஆகையால் சீஷராக்குங்கள்” என்பது போதியுங்கள் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆரம்ப கால கிங் ஜேம்ஸ் பதிப்பிளிருந்து வாசிக்கிறேன்: “ஆகையால் புறப்பட்டு போய் சகல ஜாதிகளுக்கும் போதித்து, அவர்களுக்கு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைகொல்லும்படி உபதேசியுங்கள்.” இது வியப்பாக இருக்கிறது, இந்த போதித்தல் என்ற வார்த்தை கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் இரண்டு இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தை “மதீடீயுவோ”, இந்த கிரேக்க வார்த்தையின் மொளியாக்கத்தின்படி “சீஷன்” என்பதாகும். சீஷராக்குங்கள் என்பதுதான் இந்த வார்த்தையின் பொருள். போதித்தல் என்ற அர்த்தம் கிடையாது, ஆனால் சீஷர்களை உருவாக்குதல் என்பதுதான் மையப்பொருள். அதற்கு பிறகுதான் அதனுடைய மொழியாக்கத்தில் திருத்தம் செய்யப்பட்டது. மற்ற பதிப்புகளில் அதிலிருந்து சீஷராக்குங்கள் என்று சரியாக மொழியாக்கம் செய்யப்பட்டு வருகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி. உண்மையில் இதற்கு வித்தியாசம் இருக்கிறதல்லவா சாதரணாமா போதிப்பது வேறு, சுவிசேஷம் சொல்வதும் சீஷர்களை உருவாக்குவது வேறு. இந்த நிகழ்ச்சியில் இதை பற்றிதான் நாம் பார்த்திட இருக்கிறோம்.

**ராபி கேலட்டி:** சரி. இதை இரண்டு பிரிவுகளாக பிரித்திட விரும்புகிறேன்.

முதலாவதாக, ஒன்றை முக்கியப்படுத்தி சொல்லுகிறேன். சீஷர்களை உருவாக்குவதற்கு முன்பு, நாம் சீஷர்களாக இருக்க வேண்டும். இரண்டாவது காரியம் என்னவென்றால், சீஷத்துவ பயணத்தில், ஜான், சீஷர்களை உருவாக்க வேண்டியது கட்டாயம். அது தெரிந்தெடுப்பு கிடையாது, ஒரு ஆலோசனையாக அல்ல, இப்படியும் செய்திடலாம் என்று சொல்வது கிடையாது. இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆல்ரைட், இந்த இரண்டு குறிப்புகளை பற்றி எங்களுக்கு சொல்லுங்க.

**ராபி கேலட்டி:** சரி, சீஷர்களை உருவாக்குவதற்கு, நாம ஒரு சீஷராக இருக்கவேண்டும்.

வேதாகமத்தில், கிறிஸ்தவர் என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் இரண்டு முறை சொல்லப்பட்டிருக்கிறது. அந்த இரண்டு முறையில் – அப்போஸ்தலர் 11ல் முறை கிறிஸ்தவன் வருகிறது – இது எதிர்மறையான பதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பரிகாசம் செய்வது போன்ற அர்த்தம், என்று வேதாகம அகராதிகளில் ஒன்று கூறுகிறது. யாருமே இப்படியாக யோசித்தது கிடையாது, அதாவது முதலாம் நூற்றாண்டில், தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ள வில்லை. சிறிய கிறிஸ்து என்று தான் கருதப்பட்டு வந்தது. இப்ப, இன்றைக்கு அந்த வார்த்தையை நேர்மறையாக பயன்படுத்துகிறோம். எனவே, கிறிஸ்தவன் என்கிற வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சீஷர்கள் என்ற வார்த்தை எத்தனை முறை வருகிறது என்று தெரியுமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**:அதிகம்தான்

**ராபி கேலட்டி:** அதிகம்தான் – 269 முறை சீஷர்கள் என்ற சொல் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. சுவிசேஷங்களில் மட்டுமே, இயேசு 238 முறை கூறியிருக்கிறார்.

இப்ப, பொதுவாக எழும்பும் கேள்வி: இயேசு நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார், கிறிஸ்தவர்களாக இருக்கனுமா சீஷராக இருக்கனுமா? அதற்கான பதில் நாம் சீஷர்களாக இருப்பதையே அவர் விரும்புகிறார்.

இப்ப, சீஷன் என்ற வார்த்தை சுவாரஸ்யமான வார்த்தைதான். உண்மையில், ஆராய்ந்து பார்த்து, அதை விளக்கிட இருக்கிறேன். சீஷன் என்பவன் கற்றுகொள்பவன், ஒரு நபரிடம் இருந்து கற்றுகொள்கிற ஒருவராக இருப்பார். அந்த நபர் சீஷர்களை உருவாக்குகிற சீஷனாக இருந்திடுவார், அல்லது ஒருவரால் சீஷராக்கப்பட்ட நபராக இருப்பார். இப்ப, நம்முடைய சமுதாயத்தில் இதை பற்றி கேட்டிருக்கிறோம். இதை மருத்துவ துறையோடு ஒப்பிட்டு சொல்லலாம், இளம் மருத்துவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பயிற்சி மருத்துவராக ஒருவருக்கு கீழாக செயல்படுவார். இதையே ப்ளம்பர் வேலையிலும் பார்க்க முடியும் புதிதாக கற்கும் அப்ரன்டீசுகள் இருப்பார்கள். ஒரு எலக்ட்ரீஷியன் கூட இன்னொருவருடைய அப்ரன்டீசாக இருந்திருப்பார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: நீங்கள் சீஷராக இருப்பதில் இருக்க வேண்டிய குணநலன்கள் என்னென்ன?

**ராபி கேலட்டி:** சரி. வேதத்தில் சீஷராக இருப்பதற்கு பல குணநலன்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது, இப்போது அவைகளை பார்க்கும்படியாக நான் விரும்புகிறேன். இருந்தாலும் மூன்று பிரதான குணநலன்களை உங்களுக்கு சொல்லுகிறேன். முதலாவதாக, ஜான், சீஷன் என்பவன் ஒழுக்கத்தோடு இருக்க வேண்டும். பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லும்போது 1 தீமோத்தேயு நான்கில், "சீர்கேடும் கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக்கதைகளுக்கு விலை, தேவ பக்திக்கேதுவாக முயற்சிபண்ணு என்கிறார்." சரி, முயற்சிபண்ணு எனபது ஒரு அருமையான வார்த்தை. அதற்கு கிரேக்க வார்த்தை "கும்னாசோ" என்பதாகும், அதிலிருந்துதான் ஆங்கில வார்த்தையான ஜிம்னாசியம் வருகிறது. பவுல் தீமோத்தேயுவுக்கு கட்டளை கொடுக்கிறார், "நீயே உன்னை ஒழுக்கத்திற்குள் நடத்திடு." இது உங்களுக்கு கொடுக்கப்படுகிற ஒரு கட்டளை

அதோடு இந்த கட்டளையை அனுதினமும் நீங்கள் கடைப்பிடித்து நடக்க வேண்டியதும் அவசியம்.

இன்னொரு சந்தர்ப்பத்தின் போது லூக்கா 9:57ல், மூன்று பேர் இயேசுவிடம் வருகிறார்கள். அந்த சம்பவத்தை பற்றி தெரியுமா. ஒருவர் சொல்கிறார், “உம்மை பின்பற்றிடுவேன் அதற்கு இயேசு சொல்கிறார், “கேளுங்கள், எனக்கு தலைசாய்த்து தூங்குவதற்கு கூட இடமில்லை. நான் பிரபலமாக உலாவிடம் போதகர்களில் ஒருவன் கிடையாது. நா சிறந்து விமானத்துல போகிரவநல்ல. சிறந்த விடுதிகளில் நான் தங்குவதில்லை. எனக்கு தூங்கறதுக்கு கூட இடம் கிடையாது என்றார்.” இரண்டாவது நபர் அவரிடம் வந்து சொல்கிறார், “உம்மை பின்பற்றிடுவேன், ஆனா முதல்ல நா போய் என் தகப்பனை அடக்க செய்துவருகிறேன்.” அதற்கு இயேசு, “இல்லை, இராஜ்யம் மிகவும் முக்கியமானது. மரித்தோர் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும். நீயோ என்னை, பின்பற்றிவா என்றார்.” கடைசி நபர் அவரிடம் வந்து, “இயேசுவே, உம்மை பின்பற்றிடுவேன், முத்தல போய், தாய் தகப்பனிடம் விடை பெற்று வருகிறேன் என்றார்.” அதற்கு இயேசு, “இல்லை, ராஜ்யம் சமீபமாயிருக்கிறது, அதை பிறகு பார்த்துக்கொள் என்றார்.” இது இயேசு நமக்கு என்ன சொல்ல விரும்புகிறார்: சீஷனாக இருப்பதற்கு, நாம் அர்ப்பணிப்போடு இருக்கனும், ஒழுங்கோடு இருப்பதோடு, அர்ப்பணிப்போடு இருப்பதோடு, சுயநலமின்றி இருக்க வேண்டும். அதாவது, வசனங்களில் பார்க்கும்போது, இயேசு சொல்கிறார், “உன் குடும்பத்தை நீ வெறுக்க வேண்டும், சகோதரனை வெறுக்க வேண்டும், பொருட்களை வெறுக்க வேண்டும், சீஷராக அவரை பின்பற்ற உன் சுயத்தை நீ வெறுக்க வேண்டும்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சிலர் சீஷனுக்குரிய விலையை செலுத்த மனதில்லாமல் இருக்கிறார்கள். கடந்த காலங்களில் இருந்தவர்கள் அனுபவித்த வேதனைகளை இவர்கள் அனுபவிப்பதில்லை, அவர்கள் கொலைசெய்யப்படும் நிலையில் இருந்தார்கள், சிறிய விலைகிரையம் செலுத்தவும், இவர்கள் ஆயத்தமாக இருப்பதில்லை. அப்படி இல்லாததினால், கடந்த வாரம் சொன்னது போல, இயேசு சொன்ன அந்த உண்மையான

நிலை, "இவர்களில் சிலர், பரலோகம் சென்றடையும் போது, அவர்கள் எனக்கு பாத்திரன் அல்ல என்றிடுவார். அவர்களுடைய பலனை இலந்திடுவார்கள். இப்போது இந்த பூமியில் இருக்கும்போது, இந்த ஜீவனையும் இலந்திடுவீர்கள் என்று கூறுகிறார், அதற்கு அர்த்தம் – ஏன் மரித்தவராக இருகிறீர்கள்? தேங்கி நிற்க்கும் நிலை எதற்காக? உங்கள் விசுவாசத்தில் வளராதது போன்ற உணர்வு ஏற்ப்படுவது ஏன்? அதற்கு காரணம் அவர் நமக்கு கொடுத்திருக்கும் கட்டளையை பின்பற்றாதது தான், அது உங்களுக்கு உற்ச்சாகத்தை அளித்திடும், அது உங்களை தேவனுடைய சித்தத்தின் மையத்தில் நிறுத்திடும்.

**ராபி கேலட்டி:** சரி. இதை நான் வேறுவிதமாக விளக்கி சொல்றேன். அதுதான் பொருத்தமா இருக்கும். சீஷன் என்பவன் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருப்பவனாக இருப்பான். இப்ப, கேள்வி இதுதான், ஒரு நபர் வேதத்தை பற்றிய அறிவும் வேதாகம கல்வியும் இல்லாமல் சீஷனாக முடியுமா?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: நிச்சயமா.

**ராபி கேலட்டி:** அது சாத்தியம்தான். இதுக்கு இன்னொரு பக்கமும் இருக்குது. ஒரு நபருக்கு வேதாகம கல்லூரியின் படிப்பும் பெரிய பட்டங்களும் பல வருட சபை மேய்ப்பன் என்ற அனுபவம் இருந்தும் சீஷனாக இல்லாமல் இருக்கமுடியுமா? அதற்கான பதில் முடியும் என்பதுதான். அது எதனாலன்றதையும் சொல்கிறேன். கற்றுகொள்வதை நிறுத்திவிட்டார்கள், வளர்வதை நிறுத்திவிட்டார்கள், முன்னேருவதையும் நிறுத்திவிட்டார்கள், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு தங்களுக்கு இருக்கும் உறவுக்கு போதிய போஷாக்கு அளிப்பதையும் நிறுத்திவிட்டார்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ராபி, நா சில புள்ளி விபரங்களை பார்த்திருக்கிறேன், சராசரியான ஒரு சபையில், சபை பணிகளில் சுமார் பத்து சதவிகிதத்தினரே பங்குபெறுகின்றனர், சபையினுடைய வேலைகளை எல்லாம் செய்கிறார்கள், பொதுவாக,

தொண்ணூறு சதவிகிதத்தினர் வந்து உட்கார்ந்து கவனிப்பதோடு நிறுத்திவிடுகிறார்கள். இப்படி நாம் இருக்க கூடாது என்பதைத்தான் பிரதான கட்டளை நமக்கு கூறுகிறது. பாஸ்டர்மார்களே  எல்லாவற்றையும் செய்பவர்களாக இருக்க கூடாது, எல்லா கூட்டத்திற்கும் அவர்களே போய் கொண்டிருக்கவும் கூடாது. பாஸ்டர்கள் என்ன செய்ய வேண்டும்? இந்த விஷயத்தில் பிரதான கட்டளைக்கு கீழ்படிதல் என்பது எப்படி பொருந்தும்?

**ராபி கேலட்டி:** சரி, ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறது, ஜான், சபைகளில், பாஸ்டரும்

ஊழியர்களும் ஊழியத்தின் வேலைகளை செய்ய வேண்டும் என்று கருதப்படுகிறது. விசுவாசியாக ஆரம்ப நாட்களில் நான் கேட்ட சம்பவம் நினைவிருக்கிறது. ஒரு பிரசித்திபெற்ற ஊழியர் வாலிப வயதிலான ஊழியரிடமிருந்து அழைப்பை பெற்றதை பற்றிய சம்பவம். அவர் இவரை அழைத்து இவரிடம் சொன்னார், “சபை நன்றாக வளர்ந்துகொண்டிருக்கிறது, இதுவரைக்கும் இல்லாத அளவிற்கு ஜனங்கள் ஞானஸ்நானம் எடுப்பதை கண்டு மகிழ்கிறோம். கிறிஸ்துவுக்காக எழும்புகிற அநேகரை காண்கிறோம். அநேக ஜனங்கள் வந்துகொண்டும் இருக்கிறார்கள். நமது ஞாயிறு பள்ளியும் வளர்ந்துவருகிறது.” மேலும் அவர், “ஒரு பிரச்சனை இருக்கிறது என்றார்.” அவர் சொன்னார், “நான் சபையை பார்த்து ஒரு விஷயத்தை புரிந்துகொண்டேன் மற்றவர்களுடைய வாழ்வில் தாக்கத்தை பிரதிபளிக்கும் ஒரு நபர் கூட இங்கு இல்லை.” அதோடு, “என்னுடைய ஒலிநாடாக்களை வாங்கி வைத்துகொள்பவதைவிட அடுத்த நிலையில் இருப்பவர்கள் தேவை என்றார்.” அவர், “ஒரு வியாபாரிகள் கூட்டத்தில் இருப்பவர்கள் மற்றும் ஞாயிறு பள்ளியை நடத்துபவரை காட்டிலும் மேலான ஒன்றை செய்பவர்கள் தேவை என்றார்.” அவர் சொன்னார், “சபையில் நான் இதைதான் எதிர்பார்க்கிறேன். ஒரு நபரை கிறிஸ்துவுக்குள் நடத்துகிறவர்கள் தேவை, அவர்களுடைய விசுவாச பாதையில் அவர்களோடு நடந்து அவர்கள் வாழ்வில் ஒரு தாக்கத்தை உண்டாக்குகிறவர்கள் தேவை என்றார்.” மேலும் அவர், “நா என்னுடைய சபையை

பார்க்கும்போது, அப்படிப்பட்ட ஒரு நபரை கூட பார்க்கவில்லை என்றார்."

அப்போஸ்தலனாகிய பவுலின் மூலம் இயேசு சபைக்கு கொடுத்திருக்கும் வேலைகளை பற்றி எபேசியர் 4:12-13ல் பார்க்கிறோம். பவுலினுடைய வார்த்தைகளை கவனியுங்கள்.

வசனம் 12ல் சொல்லுகிறார், அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும் சிலரை சுவிசேஷகர்களாகவும் போதகராகவும் மேய்ப்பராகவும் (எதற்காக) பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு கிறிஸ்துவின் சரீரமாகிய சபை சீர்பொருந்தும்படி ஏற்ப்படுத்தினார்." இப்ப பவுல் சபைக்கு சொல்லுகிற கட்டளை என்னவென்றால்: உங்க வேலை, ஊழியர்களை, உங்க சபையில் இருக்கிறவர்கள் உங்களை பிரதிபளிப்பவராக இருந்து மற்றவர்களுக்குள் தாக்கத்தை உண்டாக்க வேண்டும்.

பாஸ்டர்கள் நிர்வாகத்தை பார்ப்பதில் அலுவல் நிறைந்தும், வியாபாரிகள் கூட்டத்தை நடத்துவதிலும், ஒவ்வொரு கூட்டங்களுக்கு போவதுமாய் இருக்கிறார்கள். நம்முடைய நோக்கத்தை ஜனங்களை எண்ணிகையில் அதிகப்படுத்த முயலுவதில் இருந்து அவர்களை ஆவியில் வளரும்படி செய்வதில் செலுத்தவேண்டும். உங்களுக்கு தெரியுமா, ஜான், எங்க சபையில், ஜனங்கள் பக்கவாட்டில் பெருகி ஆழம் இல்லாமல் இருப்பதை விரும்பாமல், அவர் தேவ வார்த்தையில் ஆழமாக வளர்ந்திட விரும்புகிறேன், தேவ சித்தத்தை அறிந்துகொள்ளவேண்டும், தேவனுடைய கட்டளைகளை அறிந்திடவேண்டும், அவர்கள் வாழ்விற்கு தேவன் வைத்திருக்கும் பாதையை அறிந்திட விரும்புகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: இதுதான் ரொம்பவும் முக்கியமானதென்று நினைக்கிறேன். இதை இன்னொரு முறை சொல்லலாம் என்று நினைக்கிறேன். அதை மறுபடியும் சொல்லுங்க.

**ராபி கேலட்டி:** நா இதை தெளிவுபடுத்ஹ்டுகிறேன். சீஷர்களை உருவாக்குவது பாஸ்டர்களுடைய வேலை மட்டும் கிடையாது, இது ஒவ்வொரு விசுவாசிகளின் வேலை.

இயேசு விசுவாசிக்கிற யாவருக்கும் இந்த கட்டளையை கொடுத்தார். "நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதியையும் சீஷராக்குங்கள்." பில் ஹைபல்ஸ் 25,000 ஜனங்களை கொண்ட சபையின் பாஸ்டர். தன்னுடைய சபையை பற்றி அவர் நிதானித்து பார்த்த பிறகு, ஒன்றை கண்டுபிடித்தார், அதை உங்களுக்கு, சொல்லுகிறேன் "அதுதான் அவர் ஊழியத்தின் அழைப்பு மணியாக தொனித்தது," அதாவது அவர் சபைக்குள் அநேக ஜனங்களை கூட்டி சேர்த்தார் எனபது உண்மையாயிருந்தது, ஆனால் அவர்களை சீஷர்களாக உருவாக்க வில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: சரி. இப்போது ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம், ராபி, நாம் திரும்ப வந்ததும் எப்படி சீஷர்களை உருவாக்கிடலாம் என்பதை நீங்கள் விளக்கி சொல்லுங்கள், சரியா? சீஷன் எனபது யார் என்று பார்த்துக்கொண்டிருக்கிறோம், நீங்கள் எப்படி இன்னொரு சீஷனை உருவாக்க முடியும்? எனவே, இணைந்திருங்கள், மீண்டும் சந்திக்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆல்ரைட். மீண்டும் வருக. நாம் ராபி கேலட்டியுடன் பேசிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் செய்யும்படியாக இயேசு கூறிய முதல் கட்டளையை பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். பிரதான கட்டளையில் ஒன்றாக இருக்கிறது. அதனுடைய பல கோணங்களை பற்றி பார்த்தோம். சீஷர்களை உருவாக்க வேண்டும் என்று பார்த்தோம், முதலாவதாக, அதற்கு நாம சீஷனாக இருக்க வேண்டும். ஆனா இப்ப, எப்படி சீஷர்களை உருவாக்குவது என்ற இரண்டாவது குறிப்பை பார்க்க விரும்புகிறோம்.

**ராபி கேலட்டி:** சரி. இதுவரைக்கும், நம்முடைய கிறிஸ்தவ வாழ்வில் ஒரு ஒழுங்கு நமக்கு இருக்க வேண்டும் என்பதை புரிந்துகொண்டோம். இப்ப கேள்வி என்னனா, ராபி, நாங்க எப்படி சீஷர்களை உருவாக்க முடியும் எதற்காக சீஷர்களை உருவாக்கணும்? அதை மூன்று குறிப்புகளாக உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக, அது இயேசுவின் கட்டளை. ஏதாவது கேள்வி இருக்கிறதா? அதாவது, இயேசு சொல்கிறார், "நீங்கள், புறப்பட்டுபோய், சீஷர்களை உருவாக்குங்கள்." இதுதான் அந்த கட்டளையின் மையப்பொருள். காலாகாலமாக நாம் அந்த கட்டளையை தவறாக புரிந்துகொண்டோம். போ என்பது தான் கட்ட்டளை என்று நினைத்தோம், உபதேசித்தல் கட்டளை என்றிருந்தோம், ஞானஸ்நானம் கொடுத்தல் கட்டளை என்றிருந்தோம். ஆனால் இவை அனைத்தும் சீஷர்களை உருவாக்குவதின் ஒரு பகுதியாக இருக்கிறது. இப்ப, இயேசுவே அந்த வேலையை கொடுத்திருக்கிறார்.

இரண்டாவதாக, அவர் மாதிரியை காட்டியிருக்கிறார். யோவான் 17ல், அது மகா பிரதான ஆசாரியனின் ஜெபம் எனப்படும். இந்த ஜெபத்தில் இயேசு பிதாவோடு தணித்து ஜெபிப்பதை பார்க்கிறோம், சிலுவைக்கு போவதற்கு முன்பு நடக்கிறது. தேவனோடு அவர் தணித்து நின்று இந்த வியப்பை அளித்திடும் வார்த்தைகளை சொல்லுகிறார் பாருங்கள் வசனம் நான்கு, " நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையை செய்து முடித்தேன்." முடித்தேன் என்கிற இதே வார்த்தையை தான், ஜான், அவர் சிலுவையிலும் பயன்படுத்தினார் சொன்னாருல்ல,எல்லாம் முடிந்தது." என்ன முடிந்தது என்று அவர் சொல்லுகிறார். "நான் செய்யும்படி நீர் எனக்கு கொடுத்த வேலையை முடித்துவிட்டேன் என்கிறார். இப்ப பொதுவாக எழும்பும் கேள்வி, அவர் செய்யும்படியாக தேவன் அவருக்கு கொடுத்த வேலை என்ன? சரி, பலபேருடைய கருத்துபடி, அது, இந்த உலகத்தின் பாவத்தை அவர் சிலுவையில் சுமக்க வேண்டியிருந்துதான் என்கிறார்கள். அது உண்மைதான். ஆனா இன்னும் அந்த காரியம் சம்பவிக்கவே இல்லையையே. இது சிலுவைக்கு போறதுக்கு முன்னால நடப்பது. வேறு சிலர் இப்படி சொல்வாங்க, அவர், அற்புதங்களை நடப்பிக்கும்படி தேவன் கூறியிருந்தார். அதுவும் உண்மைதான், ஆனா இந்த பகுதியில் அது சொல்லப்படவில்லை. அவரை போதிக்கும்படி தேவன் சொல்லியிருக்கலாம். அதுவும் சரிதான், ஆனா இந்த பகுதியில் அது பொருந்தாது.

யோவான் 17ம் அதிகாரத்தை வாசித்து பார்க்கும்போது, அதை நீங்களும் வாசிக்கும்படி விரும்புகிறேன், இந்த பகுதியில் நீங்கள் பார்க்க முடியும் நாற்பது முறை, தேவன் தனக்கு கொடுத்த இவர்கள் என்று இயேசு குறிப்பிட்டு சொல்கிறார். யோவான் 17ம் அதிகாரம்

ஆறாம் வசனத்தில் இவர் சொல்வதை கவனித்து பாருங்கள், “நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனுஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன். அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை எனக்குத் தந்தீர், அவர்கள் உமுடைய வசனத்தைக் கைகொண்டிருக்கிறார்கள்.” இதை பார்த்தீங்களா? இந்த பகுதி முழுவதிலும் இயேசு சொல்லியிருக்கிறார், “தேவனே, நான் செய்யும்படி ஒரு வேலையை கொடுத்தீங்க, அந்த வேலையை நான் முடித்துவிட்டேன். அந்த வேலை என்னவென்றால் என்னுடைய வாழ்க்கையை மற்றவர்களுடைய வாழ்வில் பிரதிபளிக்க செய்வது, அப்போஸ்தலர்களில் அதை பார்க்கிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ராபி, அப்போஸ்தலர்களும் இதை மாரிதியாக காட்டியிருக்கிறார்கள். அதை பற்றி சொல்லுங்க.

**ராபி கேலட்டி:** சரி, அப்போஸ்தலர் 2ல், பெந்தேகோஸ்தே நாளில் பேதுரு எழும்பி நின்று பிரசங்கித்த போது, 3000 ஜனங்கள், என்றிருக்கிறது, அவர்கள் தேவனை அன்றைக்கு அறிந்திகொண்டார்கள். சரி, இன்றைக்கு நாம செய்வதை விட வித்தியாசமாக அன்றைக்கு நடந்துகொண்டார்கள். அட்டைகளை பூர்த்தி செய்வதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. முன்பாக ஜனங்கள் எழுந்து வருவதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. தலைகளை எண்ணுவதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை. அவர்கள் யோசிக்க துவங்கியதை எதை பற்றி தெரியுமா, எப்படி 3000 பேரை சீஷராக்குவது? சரி, இது மிகப்பெரிய இலக்காக மாறினது. அதனால அப்போஸ்தலர் நடபடிகளிலும் புதிய ஏற்பாடு முழுவதும் அப்போஸ்தலர்கள் நமக்கு மாதிரியை காட்டியிருக்கிறார்கள்.

இதற்கு சிறந்த உதாரணம் 2 தீமோத்தேயு 2:2 என்று நினைக்கிறேன். இங்க அப்போஸ்தலனாகிய பவுல், சிறையில் இருக்கிறார், அவருடைய வாழ்வின் இறுதி நாட்களில் தீமோத்தேயு 2:1ல் இதை சொல்லுகிறார், “ஆதலால், என் குமாரனே, நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு.அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.” நான்கு தலைமுறைகள், ஜான், இந்த வசனத்தில்,

சீஷத்துவத்தில் வருகிறார்கள். பவுல் தீமொத்தேயுவுக்குள் வைக்கிறார் – ஒன்று –இரண்டு; தீமோத்தேயு உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவிக்கிறார் – இரண்டு –மூன்று; மற்றவர்களுக்கு போதிக்க தக்க அவர்கள் , இது மூன்று – நான்கு. இந்த ஒரே வசனத்தில் சீஷத்துவத்தின் நான்கு தலைமுறை சொல்லப்பட்டிருக்கிறது.

ஜான், உங்களுக்கு தெரியுமா வேதத்தில் மற்ற வசனங்களை விட இந்த வசனம் தனக்கு அதிக தாக்கத்தை ஏற்படுத்தியதாக பில்லி கிரஹாம் கூறியிருக்கிறார், சீஷத்துவத்திற்கு சிறந்தது. இதுல ஒரு கேள்வி எழும்புகிறது, பிரசங்கித்தால் சீஷர்களை உருவாக்க போதுமானதா? நா கடந்த ஆண்டு Ph. D முடித்தேன், நா ஏவரி வில்லிஸ்கு ஈமெயில் அனுப்பினேன், மாஸ்டர் லைபின் நிறுவனர் ஆசிரியர், சீஷர்களை உருவாக்குவதில் சிறந்தவர், அவரிடம் கேள்வி கேட்டிருந்தேன், பிரசங்கித்தால் மட்டும் சீஷர்களை உருவாக்க போதுமானதா? அவர் எனக்கு பதில் எழுதி அனுப்பினார், "உங்க பேப்பர்ல குளிர்ந்த தண்ணீரை ஊற்ற எனக்கு பிடிக்கவில்லை." அதாவது, "சீஷர்களை உருவாக்கும்படி செய்கிற பிரசங்கமானது பால்வாடிக்குள் போய் குழந்தைகளுக்கு பாலை தெளித்துவிட்டு, அப்படியே விட்டுவிட்டு வந்து, "இப்பதா குழந்தைகளுக்கு பால் கொடுத்தோம் எனபது போலிருக்கும். அது ஒருவேளை சரியாக இருந்தாலும், நிச்சயம், அது சீஷர்களை உருவாக்க முடியாது."

**Dr. ஜான் அன்கொர்பெர்க்**: இன்றைக்கு சபைகளில் என்ன நடக்கிறது என்பதை பற்றிய ஒள புள்ளி விபரக் கணக்கு இருக்கிறது.

**ராபி கேலட்டி:** ஆமா, அதை விட்டுவிட்டோம், ஜான். அதை ஏன் நாம் தவற விட்டோம் என்றால் சுவிசேஷத்தை தான் நாம் கடைசியாக வைத்துகொண்டிருக்கிறோம். அதாவது, ஒரு அளவுக்கு நல்லா சுவிசேஷம் சொல்லுவோம். கிறிஸ்துவிடம் வரும்படியாக ஜனங்களுக்கு அழைப்பு கொடுப்போம், அட்டையில் பூர்த்தி செய்வது அல்லது முன்பாக வருவது, ஆனா பிரச்சனை என்னன்னா, அதற்கு அடுத்ததா என்ன செய்கிறோம்? அந்த பந்த அங்க போட்டு ஜனங்கள் இயேசுவிடம் வந்தால் நரகத்திற்கு தப்பித்து பரலோகம்

போக முடியும் என்கிறோம், ஆனா அவங்களுக்கு உதவிசெய்து விசுவாசத்தில் தடைகளை தாண்டி அவர்கள் வாழ்விற்கு போதிய போஷாக்கை அவர்களே அளித்திடும் விதமாக நடத்த தவறுகிறோம்.

சில சுவாரஸ்யமான புள்ளி விபரங்களை நான் பார்த்தேன். T- நெட் இண்டர்நேஷனலின் பாப் கில்லியம் 35 வித்தியாசமான அமைப்புகளின் நாலாயிரம் சபை மக்களிடம் கணக்கெடுப்பு நடத்தினார், அதில் சில சுவாரஸ்யமான தகவல்களை பெற்றுகொண்டார். அவர் சொல்லியிருப்பதை கேளுங்க, சபையில் இருக்கும் 24% மக்கள் அவர்களுடைய சுபாவத்தில் பின்மாற்றம் அடைந்திருப்பதை வெளிப்படுத்துகிறார்கள். அதோடு சபைக்குள் இருப்பவர்களில் 41%மக்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வில் அசையாமல் இருப்பதாக கூறுகிறார். ¾ சதவிகித சபை மக்கள் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் அசையாமல் ஒரே நிலையில் இருப்பதாக கூறுகின்றனர்.இப்ப என்னோட கேள்வி இதுதான், கிறிஸ்தவ வாழ்க்கையை குட்டையை போல இருக்கலாமா? விசுவாசிகள் பின்நோக்கி செல்லவேண்டுமா அல்லது அப்படியே நிற்க வேண்டுமா? அப்படி இல்லையென்று நினைக்கிறேன்.

தி நியூ ஆர்லியன்ஸ் பாப்டிஸ்ட் தியோலஜிகள் ச்மினரியின் டே சென்டர் பிரகாரம், அவர்கள் ஏழு அமைப்புகளின் கீழ் இருக்கும் நாற்பத்தி நான்காயிரம் தென்பகுதி பாப்டிஸ்ட் சபைகளை கவனித்திருக்கிறார்கள். அதில் தென்பகுதி பாப்டிஸ்ட் திருச்சபைகளில் பத்தில் ஒன்பது மாற்றமாக பின்தங்கிய நிலையில் இருக்கிறது. அதை பற்றி யோசித்து பார்த்தால், சபைகள் மாற்றமடைந்திருக்கிறது, பின்மாற்றத்தில் இருக்கிறது, அதனால பத்தில் ஒன்பது சபைகள் பின்தங்கிய நிலையில் உள்ளது. கேள்வி இதுதான், ஏன்? அதற்கு காரணம் என்னன்னா சீஷனாக இல்லாத சீஷர்களால் சபை நிரம்பியிருகியது. வேதத்தை வாசிப்பதில் பிரியமுள்ள ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள், ஜெபிக்க விரும்புகிறவர்கள் இருக்கிறார்கள், வசனத்தை மனப்பாடம் செய்ய விரும்புகிறவர்கள் உண்டு, ஆனால் எப்படி என்பதை அவர்கள் அறியாமல் இருகிறார்கள். ஒருவரும் சீஷத்துவம் என்ற பாதையில் அவர்களை கரம்பிடித்து நடத்திட

அவர்களோடு ஒத்துழைத்து செயல்பட முன்வரவில்லை. அதனாலதான், ஜான், இன்றைக்கு நம்முடைய சபைகளில் இது மிகவும் அவசியமானதாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: அதை எப்படி செய்ய முடியும், ராபி? ஜனங்கள் அறிந்திட விரும்புகிறார்கள், சரியா, இதை எப்படி செய்வது?

**ராபி கேலட்டி:** சரி, எப்படி செய்யக்கூடாது என்று உங்களுக்கு சொல்லுகிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஓகே

**ராபி கேலட்டி:** நீங்க என்ன செய்ய கூடாது என்றால் ஒருவரிடம் சென்று நீங்கள், "உங்களை சீஷனாக நான் நடத்திடட்டுமா என்று கேட்பது தவறு. அது சிலசமயங்களில் ஒத்து வராது. அது மூக்கை நுளைப்பதுபோலிருக்கும், கடுமையானதாக இருக்கும். எப்படி சொல்லலாம் என்று கேட்டால், "இரண்டு பேரும் சேர்ந்து வேதம் வாசிக்க விரும்புகிறீர்களா? வசனங்களை மனப்பாடம் செய்ய வாரத்தில் ஒருநாள் சந்திக்கலாமா? சீஷத்துவ பாதையில் ஒருவருக்கு ஒருவர் கணக்கொப்புவிப்பவர்களாக இருக்க வாரம் ஒருமுறை சந்திக்கலாமா?" சீஷர்களை உருவாக்குவதில் எனக்கு சவால்கள் இருந்தது, ஏன்னா என்னுடைய விசுவாசத்தின் துவக்க நிலையில் , என் வாழ்க்கைக்குள் இரண்டு நபர்கள் வந்தார்கள், டிம் லீ ப்ளுவர் மற்றும் டேவிட் பிலாட். இந்த இரண்டு பேரும் சமீபத்தில் கொகேனுக்கும் ஹெராயினுக்கும் அடிமையாக இருந்த ஒரு நபரை சந்தித்தார்கள், அவன் உலகத்திலே நம்பர் ஒன் அடிமையாயிருந்தான்,விசுவாசத்தின் துவக்க நிலை அது. அவர்கள் என்னுடைய வாழ்வில் நுழைந்தனர் என்னை சீஷத்துவ பாதையில் நடத்தினார்கள். இப்ப, சீஷத்துவத்தினால் நானும் தாக்கத்தை பெற்றுகொண்டேன் – சீஷத்துவத்தின் உருவாக்கமானே – என்னுடைய வாழ்வை மற்றவர்களுக்குள் பிரதிபலிக்க வேண்டும். இப்ப ஒன்பது பேர், ஜான், ஒவ்வொரு வாரமும், அவர்களுக்குள் என்னை ஓட்டுகிறேன், எப்படி ஜெபக்கனுன்னு கற்றுகொடுக்கிறேன், அவர்களோடு சேர்ந்து நடக்க துவங்கினேன், ஒருவருக்கொருவர்

உண்மையாக இருக்கிறோம், விசுவாசத்தின் உபதேசத்தை கற்றுகொள்கிறோம், இறையியலை கற்றுகொள்கிறோம். ஆனா அவர்கள் மனைவியை எபப்டி நடத்துவதும் என்று கற்றுதருகிறோம், பிள்ளைகளை எப்படி வளர்ப்பது, வசனங்களின் அடிப்படையில் நடப்பது எப்படி போன்றவை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: அவங்களோட எவ்வளவு மணிநேரம் செலவிடுகிறீர்கள்?

**ராபி கேலட்டி:** வாரத்திற்கு ஒன்றரை மணிநேரம் செலவிடுகிறேன். காபி சாப்பிட

போவோம், மதிய உணவிற்கு போவோம், ஒன்றாக இணைந்து வாழ்கிறோம். சீஷத்துவத்தின் இதுதான் வாழ்க்கை முறை. கற்றுக்கொள்ள கூடிய சூழ்நிலைகளை பிடித்துகொள்கிறோம், அது உண்மையில் பெரிய விஷயம் தான். சீஷத்துவ பாதையில் சில வேளைகளில் நீங்கள் கற்றுகொள்ளும்படியான சூழ்நிலைகள் அமைவது சாத்தியமானதாகும். அதை நீங்க உருவாக்க முடியாது, அதை வெளிப்படுத்த முடியாது, தானாக நடக்கும், தேவன் உங்கள் வாழ்க்கை மூலமாக மற்றவர்களுடைய வாழ்க்கையில் பேசும்படியான தெய்வீக சந்தர்ப்பத்தையும்  ஏற்ப்படுத்தி தருவார். நீங்க அப்படி செய்கிற சின்ன சின்ன விஷயங்கள் மிகப்பெரிய மாற்றத்தை உண்டாக்கிடும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆல்ரைட், நேயர்களே, வருகிற நாட்களில் ராபி சீஷர்களை உருவாகுவது எப்படி என்று பல விஷயங்களை பகிர்ந்திடுவார், வருகிற நாட்களின் நிகழ்ச்சியில் பார்த்து பயன் பெறுங்கள். இருந்தாலும் இந்த நிகழ்ச்சியின் மூலம் இன்றைக்கு மக்கள் கைகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்று நினைக்கிறீர்கள்?

**ராபி கேலட்டி:** ஜான், எனக்கு யாரும் சொல்லிக்குடுக்காம இருந்திருந்தா நா

இன்றைக்கு இங்க வந்திருக்க மாட்டேன், என்னுடைய வாழ்க்கையில் அவங்க நேரத்தை கொடுக்காம இருந்திருந்தா சாத்தியமில்லை. ஜனங்களுக்கு ஒன்றை சொல்லிக்கொள்ள விரும்பிகிறேன், மற்றவர்களுடைய வாழ்வில் எந்த மாதிரியான தாக்கத்தை உண்டாக்க போகிறீர்கள்? நீங்க எத்தனை பேரை சந்தித்து வருகிறீர்கள்? சரி, சிலர் ஒருவேளை, இப்படி சொல்லலாம், “பாஸ்டர், இதை பற்றி கேள்வி படறது இதுதான் முதல் முறை.”

அப்படியானால் சரி, ஆமா இன்றைக்கே நீங்கள் நிதானமாக தீர்மானம் எடுக்க வேண்டும், "சீஷத்துவ பாத்தியை நான் துவங்க போகிறேன்." நினைவிருக்கட்டும், நீங்க ஒரு ஒழுங்கிற்குள் வராமல் யாரையும் சீஷராக உருவாக்க முடியாது. நான் நினைக்கிறன் நீங்க பரலோகம் போன பிறகு, நம்முடைய வீடு பெரிதாக இருப்பதால் தேவன் சந்தோஷப்படமாட்டார், நம்முடைய கார்களின் அழகும், மற்ற காரியங்களும் அவர கவர்ந்திழுக்காது. ஒரு கேள்வியை நம்மிடம் கேட்ப்பார். அதை தான் கேட்ப்பார் என்று நம்புகிறேன், "எத்தனை பேருடைய வாழ்வில் நீ ஒரு தாக்கத்தை ஏற்ப்படுத்தினாய்? சகல ஜாதிகளிலும் எத்தனை பேரை நீ சீஷனாக உருவாக்கினாய்?

**Dr. ஜான் அன்கெர்பெர்க்**: ஆமா. இதை பார்த்துகொண்டிருக்கும் நேயர்களில் சிலர் ஓய்வு பெற்றவர்களாக இருக்க வாய்ப்பிருக்கிறது. நீங்கள், பலதரப்பட்ட நண்பர்களோடு தேனீர் விடுதிகளுக்கு செல்வீர்கள், இதில் தேவன் இடைபடும்படி ஜெபித்து உங்கள் நண்பர்களை சீஷர்களாக மாற்ற முயன்றிடுங்கள். இதை அவர்கள் முன்பாக வைத்து அவர்கள் தேவ் வார்த்தையை தியானிக்க ஒன்று கூட ஆயத்தமா என்று கேளுங்கள். உங்களில் வேறுசிலர், உங்க வாழ்க்கையின் பிஸியாக இருக்கலாம், மற்றவர்களோடு மதிய உணவில் சேர்ந்துகொள்ளுங்கள். இதை செய்வதற்கு பல வழிகள் இருக்கிறது. பல்கலை கழக மாணவர்களோடு தொடர்புடையவர்கள், நீங்களும், கூடி சந்திக்க வாய்ப்பிருக்கிறது, அந்த நேரங்களை எங்கே எப்படி என்று நீங்கள் முடிவு செய்திட வேண்டும். அதை பற்றி வருகிற வாரத்தில் பார்த்திடுலாம்.

அடுத்த வார நிகழ்ச்சியில் நாம் பார்க்க இருக்கும் கேள்வி என்னவென்றால், அதாவது கிறிஸ்தவர்கள், இன்னும் வெதுவெதுப்பான மனநிலையில் இருக்கிறார்களா, "இல்ல, இதை என்னால் செய்ய முடியாது," என்கிறார்களா. இதோ அவர்களுக்கான சத்தியம் இதுதான். அவர்களை தேவனுக்குள் நடத்துவதற்கான செய்தி இங்கே சொல்லப்படுகிறது, நித்திய ஜீவனை, பற்றி பகிர்ந்துகொள்ளாமல் இருக்க போகிறீர்களா? அதற்கு அர்த்தம் என்ன தெரியுமா உங்கள் அயலாரை தேவனுடைய சுவிசேஷத்தை

அறிந்துகொள்ளாதபடிக்கு தடை செய்வது நீங்கள் தான். அதை பற்றியும் அடுத்த வார நிகழ்ச்சியில் பார்த்திட இருக்கிறோம். தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.